ஆடி 3 – வழிப்படுத்து குழு சந்திப்பு

சண், விமலச்சந்திரன் ஆகியோர் நகரசபை உறுப்பினர் ஜிம் கரிஜானிஸ் உடன் தாம் நடாத்திய சந்திப்பின் சாரத்தை சமர்பித்து கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர்கள் தமது அரச தரப்புச் சந்திப்புகளின் விபரங்களை இற்றைப்படுத்தினார்கள்.

விமலச்சந்திரன் கருத்துக்கணிப்பப் பொறிமுறையையும் அதில் இதுவரை 320 பதிவுகள் பதிவாகி உள்ளதையும் தெரிவித்தார். நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ள பகிரங்க பொதுக்கூட்டத்துக்கு முன்னர் 1000 பதிவுகள் வரை இலக்கு வைக்ககப்படுவதாகத் தெரிவிக்கப்பட்து.

குழுவின் பணிக்காகத் தன்னார்வத் தொண்டர்களைத் திரட்டுவது பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

யாப்பின் உபவிதிகளும், நிறுவனமாகப் பதிவதற்குரிய படிவமும் குழுவினால் மீள்பரிசீலிக்கப்பட்டது. நீண்ட கால நோக்கில் எமது நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பேணும்வகையில் இது ஒரு அறப்பணி அமைப்பாகப் பதிவு செய்யப்படுவதே இதன் முக்கிய நோக்கம் என்பது வலியுறுத்தப்பட்டது.

பொதுச்சமூகத்துக்கு மேலும் முழுமையான தகவல்களை தெரியப்படுத்தும் வகையில் நகரசபை மணடபத்தில் நடாத்தப்படவிருந்த பகிரங்க பொதுக்கூட்டம் ஆவணி 18ம் திகதிக்குப் பின் போடப்பட்டது. இந்த திகதி மாற்றத்தை பொதுச் சமூகத்துக்கு அறிவிக்கும் அறிவிப்புகள் வெகுவிரைவில் சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும்.